THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Tuesday, 8th December 1959.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER: கனம் கக்கன் அவர்கள் இன்றையதினம் ஊரில் இல்லே. அவர் பதிலளிக்கவேண்டிய கேள்விகள் 37, 38, 44, 45 ஆகியவை இன்னொரு நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

Grants for digging wells

*** 31 *Q*.—SRI S. M. ANNAMALAI**: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கிணறு வெட்டுவதற்கு கடன், மான்யம் சமுதாய நல விஸ்தரிப்புத் திட்ட பகுதிகளுக்குக் தராததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: Loans upto a maximum of Rs. 2,500 are granted for the purpose of construction of wells for irrigation purposes from the loan provision available in the block budget under 'Irrigation and Reclamation' with a 25 per cent subsidy on the total cost of the works.

No loans or grants to individuals are given for construction of wells for drinking water purposes. Works for the provision of drinking water wells are however taken up from block funds with a 25 per cent public contribution from the beneficiaries.

SRI S. M. ANNAMALAI: ஸார், சமுதாய நலப் பகுதிகளுக்கு "இரிகேஷன் அண்டு ரெக்ளமேஷன்" என்ற தலைப்பின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் 25 சதவிகிதம் கிராண்ட் கூட சரியாகக் கொடுக்கப்படுவதில்லே. ஜி.ஓ. சரியாக இல்லாததே அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அதைக் கொடுக்க சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது அந்தத் திட்டத்திலே 25 சதவிகிதம் "சப்ஸிடி"யுடன் 2,500 ரூபாய் வரை கடன் கொடுக்க இடமிருக்கிறது. அதில் ஏதும் கஷ்டம் இருந்தால் தனியாக அங்கத்தினர் எழுதி அனுப்பினல் கவனிக்கப்படும்.

Drinking water well near burial ground

*** 32 *Q*.—SRI N. R. THIAGARAJAN**: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, மேலூர் தாலுகா, நத்தத்தில் ஸ்தல அபிவிருத்தி திட்டத்தில் மயானத்திற்கு 70 அடிக்குள் குடி தண்ணீர் கிணறு தோண்டப்பட்டுள்ளதா ?